**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.66/2025 – PW- 6**

| | |
|---|---|
| Name | திரு. கோகுல் |
| Husband/Father Name | ராதா கிருஷ்ணன் |
| Village /Area | நெல்வாய் |
| Taluk | நெமிலி |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 22 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.11.2025.

**(எதிரிகள் ஆஜர்.).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த தமிழரசன் மற்றும் அசா.1, அசா.2, அசா.3 ஆகியோர்கள் என்னுடைய நண்பர்கள் ஆவார்கள். 16.01.2025 அன்று பகல் 02.30 மணிக்கு சங்கரும், மணிகண்டனும் பனப்பாக்கம் செல்வதற்காக என்னை அழைத்தார்கள். நாங்கள் சென்று பனப்பாக்கம் பெட்ரோல் பங்கில் மணிகண்டனுடைய இரு சக்கர வானத்திற்கு பெட்ரோல் போட்டுக்கொண்டு சங்கர் உடைய இரு சக்கர வாகனத்திற்கு பெட்ரோல் வாங்கினோம்.

பிறகு பனப்பாக்கத்தில் உள்ள தாபா ஓட்டலில் சாப்பிட்டோம் பிறகு தென்மாம்பாக்கம் வழியாக எங்களுடைய வீட்டிற்கு சென்றோம். எனக்கு வீட்டில் வேலை இருப்பதாக கூறிவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பிறகு தமிழரசனும், விஜயகணபதியும் தீப்பற்றி எரிவதாக பொதுமக்கள் சம்பவ இடத்திற்கு ஓடினார்கள்

நானும் சென்றேன். பிறகு தீக்காயம் பட்ட தமிழரசனையும், விஜயகணபதியையும் 108 ஆம்புலன்சில் ஏற்றினார்கள். அப்போது நான் அங்கிருந்தவர்களை கேட்ட போது தமிழரசனுக்கும், பிரேம்குமாருக்கும் வாக்குவாதம் நடந்ததாக கூறினார்கள். பிறகு ஒருவொருக்கொருவர் மாறி மாறி அடித்துக்கொண்டதாகவும், பிரேம்குமார் என்பவர் தமிழரசனை கொளுத்திவிட்டதாகவும் கூறினார்கள்.

பிறகு காயம் பட்டவர்களை காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறினார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

ஆஜர் எதிரிகளில் பிரேம்குமார், வெங்கடேசன், நவீன் ஆகியோர் திருமால்பூரில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் என்னுடன் 10 வகுப்பு வரை படித்தார்கள். மேற்படி மூவரும் எந்த ஜாதியை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மூவரும் திருமால்பூர் காலனியை சேர்ந்தவர்கள்.

ஊரில் யார் வசிப்பார்கள் காலனியில் யார் வசிப்பார்கள் என்ற விவரம் பற்றி தெரியும். காலனியில் SC மக்கள் தான் வசிப்பார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். ஆகையால் மேற்படி மூவரும் SC வகுப்பை சார்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான்.

சங்கர் மற்றும் மணிகண்டனுடன் நான் பெட்ரோல் போடச்சென்றேன். சங்கர் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடைப்பட்ட தொலைவு 100 மீட்டருக்குள் தான் இருக்கும். மணிகண்டன் வீட்டில் இருந்து எனது வீடு 4 – 5 வீடு தள்ளி உள்ளது. 16–ம் தேதி காணும் பொங்கல் என்பதால் அனைவரின் வீட்டிலும் கறி சோறு

சமைத்து சாப்பிடுவார்கள் என்றும், எனது வீட்டிலும் அசைவு உணவு சமைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அன்றைய தினம் எனது வீட்டில் சமைக்கப்பட்ட அசைவ உணவை தான் சாப்பிட்டேன் என்று சொன்னால் சரிதான்.

சங்கரும், மணிகண்டனும் சம்பவ தினத்தன்று என்னை கைப்பேசில் ஓட்டலுக்கு சென்று சாப்பிட அழைத்தார்கள். இரு சக்கர வாகனத்தில் மூவர் செல்வது சட்டப்படி குற்றம் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் அவ்வாறு அவர்களுடன் செல்ல மறுப்பு தெரிவித்தேனா என்றால் இல்லை. நான் தாபாவில் சென்று சாப்பிட்டு பெட்ரோல் வாங்கிக்கொண்டு நேராக நாங்கள் எனது வீட்டிற்கு வந்தோம்.

சங்கரும், மணிகண்டனும் என்னிடம் என்ன கூறி இறக்கிவிட்டார் என்றால் எதுவும் கூறவில்லை. வேலை இருந்ததால் இறங்கினேன். என்னை சங்கர் அவருடைய கைப்பேசியில் தான் அழைத்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை 17.01.2025 அன்று எங்கள் ஊருக்கு வெளியே விசாரித்தார்கள். என்னை விஜயலட்சுமி என்ற காவல் ஆய்வாளர் காலையில் விசாரித்தார். அவரிடம் முதல் விசாரணையில் கூறிய விவரங்களை தான் நான் கூறினேன் என்று சொன்னால் சரிதான்.

ஊரில் தமிழரசன் எரிந்து கொண்டிருப்பதாக கூறியதன் அடிப்படையில் தான் நானும் ஊர்காரர்களுடன் சேர்ந்து ஓடினேன். அந்த விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் கூறினேன். வேறு யாரும் எனக்கு தமிழரசன் எரிந்து கொண்டிருந்த விவரத்தை என்னிடம் கூறவில்லை. யாரால் தமிழரசன் எரிந்து கொண்டிருந்தார் என்று எனக்கு தெரியாது என்றும், ஊர்காரர்கள் கூறியதன் அடிப்படையில்

தான் நான் சென்றேன் என்று சொன்னால் சரிதான்.

தமிழரசன், மணிகண்டன், சங்கர் மற்றும் விஜயகணபதி ஆகியோர்கள் எனது நண்பர்கள் என்று சொன்னால் சரிதான். தமிழரசனுக்கும் பிரேம்குமாருக்கும் சம்பவம் முன்தினம் ஒரு தகராறு நடந்த விவரம் பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்படி என் நண்பர்களான தமிழரசன், மணிகண்டன், சங்கர் மற்றும் விஜயகணபதி ஆகியோர்களுடன் சேர்ந்து முதல் எதிரியான பிரேம்குமாரை தீயிட்டு கொளுத்த ஒரு சதி திட்டம் தீட்டினோம் என்று சொன்னால் அது தவறு, அதற்காக தான் நான் பெட்ரோல் வாங்க சென்றேன் என்று சொன்னால் தவறு.

அதற்காக தன் வீட்டில் சாப்பிட்ட நாங்கள் இந்த வழக்கை திசை திருப்புவதற்காக தாபாவில் சென்று சாப்பிட்டதாக பொய்யாக கூறுகிறோம் என்று சொன்னால் தவறு. நான் எனது ஊரில் இறங்கிவிட்டு பிரேம்குமார் எங்கு வருகிறார் என்று அன்றைய தினம் தகவல் கொடுக்கும் வேலையை நான் பார்த்தேன் என்று சொன்னால் அது தவறு. அதானல் தான் போலீஸ் விசாரணையில் சங்கரும், மணிகண்டனும் என்னை அழைத்து சென்ற விவரத்தை கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் அவ்வாறு கூறாததற்கு காரணம் என்னுடைய Call Details –ஐ எடுத்தால் நாங்கள் செய்த சதித் திட்டம் தெரிய வரும் என்பதால் தான் சங்கரும், மணிகண்டனும் அழைத்த விவரத்தை நான் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் போலீசாரிடம் அந்த தகவலை கூறினேன். நாங்கள் முதல் எதிரிக்கு எதிராக திட்டம் போட்டது வெளியே தெரிந்தால் அது ஜாதி கலவரமாக வெடித்துவிடும் என்ற காரணத்தால் அதை காவல் துறை திட்டம் போட்டு மறைத்தார்கள்

என்று சொன்னால் அது தவறு. எங்கள் ஊரில் இரண்டு நாட்கள் தொடர்ந்து போராட்டம் நடந்தது என்று சொன்னால் சரிதான்.

எதற்காக நடந்தது என்றால் தமிழரசன் உயிர் இறந்ததற்கு சரியான நியாயம் கிடைக்க வேண்டும் என்று கோரி நடந்தது. போராட்டம் நடக்கும் வரைக்கும் போலீசார் முதல் தகவல் அறிக்கையை பதியவில்லை என்று சொன்னால் விசாரித்து கொண்டிருந்தார்கள் வழக்கு பதியப்பட்டதா என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எனக்கு சம்பவத்தை பற்றி எந்த விவரமும் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>2 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நாங்கள் பனப்பாக்கத்தில் பெட்ரோல் வாங்கி வர திருமால்பூர் வழியாக சென்றோம். என் ஊரில் இருந்து திருமால்பூர் செல்லும் சாலை வடக்கு தெற்காக உள்ளது. எங்கள் ஊரில் இருந்து வரும் வழியில் தான் வீராக சீரக நதிப் பாலம் உள்ளது என்று சொன்னால் சரிதான். பள்ளூர் ரோடு கிழக்கு மேற்காக உள்ளது. அந்த வழியாக வந்து தான் பெட்ரோல் வாங்க 04.00 மணிக்கு சென்றோம். நாங்கள் சென்று சாப்பிட்ட தாபா ஓட்டல் 53 என்ற சாலையில் உள்ளது. அங்கு சுமார் அரை மணி நேரம் இருந்தோம். அங்கிருந்து தென்மாம்பாக்கத்திற்கு 10 நிமிடத்தில் சென்றோம். அந்த தாபாவில் சுமார் அரை மணி நேரம் இருந்தோம்.

தாபாவில் இருந்து பனப்பாக்கம் வழியாக வந்து எனது ஊருக்கு சென்றோம். பனப்பாக்கத்தில் இருந்து திருமால்பூரில் உள்ள வீரக சீரக நதிப் பாலம் அருகே வரும் போது மாலை 05.15 மணியிருக்கும். அங்குள்ள ஆலமரத்தின் அருகே விளையாட்டு

போட்டிகள் அன்றைய தினம் நடந்துக்கொண்டிருந்தது என்று சொன்னால் சரிதான் அப்போது சுமார் 200– 300 நபர்கள் இருந்திருப்பார்கள் என்று சொன்னால் சரிதான். விளையாட்டு போட்டிகள் முடிய இரவு 09.00 – 10.00 மணியாகும் என்று சொன்னால் சரிதான். விளையாட்டு போட்டி என்பதால் போலீசார் பாதுகாப்புக்கு இருந்தர்கள் என்று சொன்னால் சரிதான். விளையாட்டு போட்டிகள் நடந்த இடத்திற்கும் வீரக சீரக பாலத்திற்க்கும் இடைய 50 அடி தொலைவு இருக்கும் என்று சொன்னால் சரிதான்.

அதற்கு இடையே உள்ள பனப்பாக்கம் To பள்ளூர் ரோடு 25 அடி அகலம் கொண்டது என்று சொன்னால் சரிதான். ஆலமரத்தில் இருந்து எங்கள் ஊருக்கு செல்லக்கூடிய தார் ரோடும் 25 அடி அகலம் கொண்டது என்று சொன்னால் சரிதான். ஆலமரத்திற்கு நேர் பார்வையில் எங்கள் ஊருக்கு செல்லக்கூடிய ரோடு உள்ளது என்று சொன்னால் சரிதான். விளையாட்டு போட்டிகள் நடைபெற்ற இடத்திலிருலுந்து வீரக சீரக நதிப் பாலம் பார்த்தால் தெரியும் என்று சொன்னால் நேர் பார்வையில் தெரியும். மேற்படி சாலையில் 24 மணி நேரமும் ஆட்கள் நடமாட்டம் மற்றும் போக்குவரத்து நடமாட்டம் இருக்கும் என்று சொன்னால் சரிதான்.

சங்கர் பெட்ரோல் பங்கில் வாங்கிய பாட்டிலை தாபாவிற்கு செல்லும் போது கையில் வைத்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அங்கிருந்த எனது வீட்டிற்கு வரும் போது சங்கர் அவர் கையில் பெட்ரோல் பாட்டிலை கையில் வைத்திருந்தார் என்று சொன்னால் சரிதான். என்னை விட்டுவிட்டு சங்கர் அவரது வீட்டிற்கு சென்றாரா என்றால் இல்லை. அவர் பெட்ரோல் பாட்டிலுடன் மீண்டும் வீரக சீரக நதிப் பாலத்திற்கு சென்றாரா என்றால் என்னை விட்ட பிறகு எந்த

திசையில் சென்றார் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது. சங்கர் 1 லிட்டர் பாட்டிலில் தான் பெட்ரோல் வாங்கினார். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் வாட்டர் பாட்டிலில் தான் சங்கர் பெட்ரோல் வாங்கினார். அரை லிட்டர் பாட்டிலில் சங்கர் பெட்ரோல் வாங்கவில்லை.

சங்கர் 1 லிட்டர் பாட்டிலை பங்குக்கு எதிரில் இருந்து தான் எடுத்தார். நான் ஏற்கனவே பாட்டிலில் பெட்ரோல் வாங்கியுள்ளோமா என்றால் வாங்கியுள்ளோம். 1 லிட்டர் பாட்டிலில் முழுமையாக 1 லிட்டர் பெட்ரோல் நிரப்ப முடியாது என்று சொன்னால் சரிதான். 98 மில்லி தான் பிடிக்கும். சங்கர் அவர் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்றால் எனது வீட்டை தாண்டி தான் செல்ல வேண்டும் என்று சென்னால் சரிதான் அவ்வாறு சங்கர் அவர் வீட்டிற்கு சென்றாரா என்றால் தெரியவில்லை.

என்னை எனது வீட்டிற்கு விட்டு விட்டு திருமால்பூருக்கு வரவேண்டும் என்றால் என்னை அழைத்து சென்ற பாதையில் தான் வர வேண்டும் என்று சொன்னால் சரிதான். போலீஸ் விசாரணையில் என்னை எனது வீட்டருகே இறக்கிவிட்ட பிறகு ஊர் மக்கள் தமிழரசன் தீப்பற்றி எரிவதாக கூறியதன் அடிப்படையில் தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என கூறினேனா என்றால் கூறினேன்.

அதே போல் போலீஸ் விசாரணையில் தமிழரசனும் பிரேம்குமாரும் ஒருவொருக்கொருவர் அடித்து கொண்டதாகவும், பிறகு பிரேம்குமார் என்பவர் கொளுத்தி விட்டதகா கூறிய விவரத்தை நான் கூறினேனா என்றால் நான் கூறினேன். யார் பெட்ரோல் ஊற்றி கொளுத்தினார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் அதைப்பற்றி தெரியாது.

தமிழரசனும் பிரேம்குமாரும் ஒருவொருக்கொருவர் அடித்து கொண்டதாகவும் அதன் பிறகு சம்பவம் நடந்ததாக கூறிய விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். யார் குறிப்பாக சொன்னார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. கும்பலாக ஊர் பொதுமக்கள் பேசியதை கேட்டதன் அடிப்படையில் தான் எனக்கு சம்பவத்தை பற்றி தெரியும்.

வழக்கு பற்றிய விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும் எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் மேலும், போராட்டங்கள் நடந்த போது நாங்கள் எங்களுக்குள் இவ்வாறு தான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று பேசி முடிவு செய்துக்கொண்டோம் என்று சொன்னால் தவறு.

16 மற்றும் 17–ம் தேதிகளில் போராட்டம் நடந்த பின்பு போலீசார் வழக்கு பதிவு செய்த பிறகு தான் போராட்டத்தை கைவிட்டோம் என்று சொன்னால் சரிதான். ஆகையால் நாங்கள் திட்டமிட்டு தான் எதிரிகள் மீது வழக்கை திசை திருப்பி விட்டோம் என்று சொன்னால் தவறு. நாங்கள் நினைத்தது நடந்த பிறகு தான் போராட்டத்தை கைவிட்டோம் என்று சொன்னால் சரிதான்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.13 18:31:31 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.